பகுதி - 1

# தமிழ் செய்யுள் திரட்டு

இளங்கலை, இளம்அறிவியல்,
இளம்வணிகவியல்

முதற்பருவம் மற்றும் இரண்டாம் பருவம்

* * ☆☆☆☆☆

வெளியீடு:
தமிழ்துறை
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014 ☎ : 28482441, 42155309
e-mail : pavai123@yahoo.com

Scanned by TapScanner

Scanned by CamScanner

4.5.67 ★★★★★★ 4.5.67

# இளங்கலை - முதலாம் ஆண்டு
# பகுதி - 1 தமிழ் முதல் பருவம்

## இக்கால இலக்கியம்
**(செய்யுள், உரைநடை, சிறுகதை, இலக்கிய வரலாறு)**

அலகு - 1

**பாரதியார்** : 1. ஆதி சிவன் பெற்றுவிட்டான்
2. யாமறிந்த மொழிகளிலே
3. மன்னும் இமயமலை
4. ஞானத்திலே

**பாரதிதாசன்** : 1. குடும்ப விளக்கு - ஒருநாள் நிகழ்ச்சி ("இளங்கதிர் - என்ற பாடல் முதலாக பூரிப்பார் நலம்பாடி இரவு செல்லும்" என்பது ஈறாக)

**கவிமணி** : 1. கோவில் வழிபாடு
2. கடிகாரம்

**நாமக்கல் கவிஞர்** : 1. தேசத்தொண்டு
2. வ.உ. சிதம்பரம்பிள்ளை

அலகு - 2

**கண்ணதாசன் தத்துவப்பாடல்கள்** :
1. ஆறுமனமே ஆறு
2. நாலு பேருக்கு நன்றி
3. மன்னும் இமயமலை
4. ஞானத்திலே

CA

I CA

**வைரமுத்து** : 1. அவசரத் தாலாட்டு
2. அவன் கலைமகளுக்குப் பாடம் சொல்கிறான்

**தேன்மொழி** : 1. காடு வெறுங்காடா
2. மனக்குறிப்பு

**கனிமொழி** : 1. நம்பிக்கை பிரதிநிதிகள்
2. தெளிவு

II CA

அலகு - 3 : உரைநடை
சான்றோர் சிந்தனைகள் (கட்டுரைத்தொகுப்பு)
ளி. விருத்தாசலம்

அலகு - 4 : சிறுகதை, ஒளிச்சேர்க்கை
(சிறுகதைதொகுப்பு) தொகுப்பாசிரியர்
முனைவர் தங்க. செந்தில்குமார்

அலகு - 5 : இலக்கிய வரலாறு (மரபுக்கவிதை, புதுக்கவிதை, உரைநடை, சிறுகதை)

Scanned by TapScanner

Scanned by CamScanner

# பாரதியார்

அறம் பாட வந்த மறவராம் பாரதியின் இயற்பெயர் சுப்ரமணியன் என்பதாகும். இவர் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் கி.பி. 1882 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11- ஆம் நாளில் பிறந்தார். இவர் மக்கள் கவி, புதுநெறி காட்டிய புலவர், மானுடம் பாட வந்த மாக்கவி என போற்றப்படுகிறார்.

இவரது கவிதைகள் சிறப்புத் தன்மையும் புதுமைத் தன்மையும் கொண்டவை. இவர் எழுதிய குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியன 'முப்பெரும் பாடல்கள்' என்று சிறப்பிக்கப் பெறுகின்றன. இவரது பிற படைப்புகள், புதிய ஆத்திச்சூடி, சுயசரிதை, ஞானரதம், சின்னசங்கரன் கதை போன்றவையாகும். கவிதை தவிர பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தேசபக்தராகிய இவர் சுதேசமித்திரன், இந்தியா போன்ற இதழ்களில் எழுதி வந்தார். நாடு விடுதலை அடைவதற்கு முன்பாகவே

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று**
**ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"**

என்று பாடி ஆனந்தம் கொண்டவர். இவர் நாட்டு விடுதலையை மட்டுமன்றி அறியாமை, பெண்ணடிமை, மூடநம்பிக்கை, வறுமை ஆகியவற்றிலிருந்தும் விடுதலை பெற வேண்டுமென்று விரும்பினார்.

பன்மொழிப் புலமை பெற்ற இவர் தமிழ்மொழியின் மீது தீராக் காதலும் பற்றும் கொண்டிருந்தார்.

Scanned by TapScanner
Scanned by CamScanner

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்"

என்ற வரிகள் இதனைப் புலப்படுத்தும். தமிழ்த்தாய், தமிழ், எங்கள் நாடு போன்ற கவிதைகள் நமக்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளன.

## 1. தமிழ்த்தாய்

ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்

மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளி னுள்ளே - உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.

கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

சாத்திரங் கள்பல தந்தார் - இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்

நன்றென்றுந் தீதென்றும் பாரான் - முன்
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான்.

கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி - யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு - பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்!

Scanned by TapScanner

Scanned by CamScanner

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடு வீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

தந்தை அருள்வலி யாலும் - இன்று
சான்ற புலவர் தவவலி யாலும்,
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.

## 2. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை, வெறும் புகழ்ச்சியிலை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

Scanned by TapScanner

Scanned by CamScanner

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்.
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

## 3. எங்கள் நாடு

மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இதுபோலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.

மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு.
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெறும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே.

Scanned by TapScanner

Scanned by CamScanner

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கன்னலும் தேனும் கனியும் இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே.

## 4. பாரத நாடு

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு

ஞானத்தி லேபர மோனத்தி லே - உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

தீரத்தி லேபடை வீரத்திலே - நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

நன்மையி லேஉடல் வன்மையிலே - செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு 'மாதர்'தம் கற்பின்
புகழினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே - புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

வண்மையி லேஉளத் திண்மையிலே - மனத்
தண்மையி லேமதி நுண்மையிலே
உண்மையி லேதவ றாத புலவர்
உணர்வினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

Scanned by TapScanner

Scanned by CamScanner

யாகத்தி லேதவ வேகத்திலே - தனி
யோகத்தி லேபல போகத்திலே
ஆகத்தி லேதெய்வ பக்திகொண் டார்தம்
அருளினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

ஆற்றினி லேசுனை யூற்றினிலே - தென்றல்
காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபயன் ஈந்திடுங் காலி
இனத்தினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே - கனி
ஈட்டத்தி லேபயிர் ஊட்டத்திலே
தேட்டத்தி லேஅடங் காத நிதியின்
சிறப்பினி லேஉயர் நாடு - இந்தப் (பாருக்)

Scanned by TapScanner

Scanned by CamScanner

# 2. பாரதிதாசன்

'புரட்சிக் கவிஞர்' என அழைக்கப்படும் பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராவார். இவர் 29.04.1891 இல் புதுவையில் திரு. கனகசபை, இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகத் தோன்றினார். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம் என்பதாகும். பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாக தமது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

இவரது கவிதைகள் பாரதிதாசன் கவிதைகள் என்ற பெயரில் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஐந்தாம் தொகுதி 'பன்மணித் திரள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இவர் அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, குறிஞ்சித்திட்டு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி, இசையமுது, கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

இவரது படைப்பான, "பிசிராந்தையார்" என்ற நாடக நூல் 1970இல் சாகித்ய அகாதமி விருது பெற்றது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் குடும்பக்கட்டுப்பாடு பற்றி பாடல் எழுதிய கவிஞர் இவரே. 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற பாடலின் அழகும் பொருளும் இவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்தின.

'கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன்' என்ற பல புனைப்பெயர்களில் பாடல்களும், கதை, கட்டுரைகளும் எழுதி வந்தார். இவர் எழுதிய குடும்ப விளக்கு என்னும் படைப்பில் 'ஒருநாள் நிகழ்ச்சி' நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

Scanned by TapScanner

Scanned by CamScanner

# குடும்ப விளக்கு

## முதற் பகுதி
## ஒருநாள் நிகழ்ச்சி
## அகவல்

### காலை மலர்ந்தது

இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை.
இரவு போர்த்த இருள்நீங்க வில்லை
ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்,
நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது
தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது.
புலர்ந்தி டப்போகும் பொழுது, கட்டிலில்
மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்.

### அவள் எழுந்தாள்

தூக்கத் தோடு தூங்கி யிருந்த
ஊக்கமும் சுறுசுறுப் புள்ளமும், மங்கை
எழுந்ததும் எழுந்தன இருகை வீசி;
தெளிவிலாக் கருக்கலில் ஒளிபடும் அவள்விழி
குளத்து நீரில் குதிக்கும் கெண்டைமீன்!

### கோலமிட்டாள்

சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்
பொன்னாற் செய்த பொடிமுத் தைப்போல்
துளிஒளி விளக்கின் தூண்டு கோலைச்
செங்காந் தள்நிகர் மங்கை விரலால்
பெரிது செய்து விரிமலர்க் கையில்
ஏந்தி, அன்னம் வாய்ந்த நடையொடு,
முல்லை அரும்பு முத்தாய்ப் பிறக்கும்,
கொல்லை யடைந்து குளிப்புதுப் புனலை
மொண்டாள்; மொண்டு, முகத்தைத் துலக்கி
உண்டநீர் முத்தாய் உதிர்த்து பின்னும்
சேந்துநீர் செங்கை ஏந்தித் தெருக்கதவு

Scanned by TapScanner

Scanned by CamScanner

சார்ந்ததாழ் திறந்து, தகடுபோற் குறடு
கூட்டி, மெருகு தீட்டிக் கழுவி,
அரிசிமாக் கோலம் அமைத்தனள்; அவளுக்கும்
பரிசில் நீட்டினான் பகலவன் பொன்னொளி,

## காலைப் பாட்டு

இல்லத் தினிலே ஏகினாள் ஏகி
யாழின் உறையினை எடுத்தாள்; இசையில்
'வாழிய வையம் வாழிய' என்று
பாவலர் தமிழிற் பழச்சுவை சேர்த்தாள்.
தீங்கிலாத் தமிழில் தேனிசைக் கலவைபோல்
தூங்கிய பிள்ளைகள், தூங்கிய கணவனின்
காதின் வழியே கருத்தில் கலக்கவே,
மாதின் எதிர்அவர் வந்துட் கார்ந்தனர்.
அமைதி தழுவிய இளம்பகல்,
கமழக் கமழத் தமிழிசை பாடினாள்.

## வீட்டு வேலைகள்

பறந்தனள் பச்சைப் பசுங்கிளி; மாடு
கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்
செம்பு தவலை செழும்பொன் ஆக்கினாள்
பைம்புனல் தேக்கினாள் பற்ற வைத்த
அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக்
குடிக்க இனிய கொத்து மல்லிநீர்
இறக்கிப் பாலொடு சர்க்கரை இட்டு
திறக்க அன்பு நிறையப் பிசைந்த
முத்தான வாயால் முழுநிலா முகத்தாள்
'அத்தான்' என்றனள் அழகியோன் வந்தான்.

## கணவனுக்கு உதவி

வந்த கணவன் மகிழும் வண்ணம்
குளிர்புனல் காட்டிக் குளிக்கச் சொல்லி,
துளிதேன் சூழும் களிவண்டு போல
அன்பனின் அழகிய பொன்னுடல் சூழ்ந்து,
மின்னிடை துவள, முன்னின் றுதவி,
வெள்ளுடை விரித்து மேனி துடைத்தபின்,

Scanned by TapScanner

Scanned by CamScanner

## குழந்தைகட்குத் தொண்டு

'பிள்ளைகாள்' என்றனள்! கிள்ளைகள் வந்தனர்
தூய பசும்பொன் துளிகளைப் போன்ற
சீயக் காயத்தூள் செங்கையால் அள்ளிச்
சிட்டுக் காட்டியும் சிறுகதை சொல்லியும்
தொட்டுத் தேய்த்துத் துளிருடல் நலங்காது
நின்ற திருக்கோலம் பொன்னின் சிலைகட்கு
நன்னீராட்டி நலஞ்செய்த பின்னர்
பூவிதழ் மேற்பனி தூவிய துளிபோல்
ஓவியக் குழந்தைகள் உடலில்நீர் துளிகளைத்
துடைத்து, நெஞ்சில் சுரக்கும் அன்பு
அடங்கா தவளாய் அழகுமுத் தளித்தே.
'பறப்பீர் பச்சைப் புறாக்கள்' என, அவர்
அறைக்குள் ஆடைபூண் டம்பலத் தாடினார்.

## காலை யுணவு

அடுக்களைத் தந்தி அனுப்பினாள் மங்கை;
"வந்தேன்" என்று மணாளன் வந்தான்
"வந்தோம்" என்று வந்தனர் பிள்ளைகள்.
பந்தியில் அனைவரும் குந்தினர் வரிசையாய்த்
தழைத்த வாழைத் தளிரிலை தன்னில்
பழத்தோடு படைத்த பண்டம் உண்டனர்
காய்ச்சிய நறுநீர் கனிவாய்ப் பருகினர்.

## தாய்தான் வாத்திச்சி

நேரம் போவது நினையா திருக்கையில்
பாய்ச்சிய இளங்கதிர் பட்டது சுவர்மேல்
அவள் கண்டு, காலை "ஆறுமணி" என
உரைத்தாள் கணவன், இருக்கா தென்றான்.
உண்டுண் டுண்டென ஒலித்தது சுவரின்
அண்டையில் இருந்த அடுக்கம் மணிப்பொறி
பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்.
அவள்வாத் திச்சி அறைவீடு கழகம்
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை அள்ளி
விழுங்கினார் பிள்ளைகள் வேளை யாயிற்றே!

Scanned by TapScanner

Scanned by CamScanner

## பள்ளிக்குப் பிள்ளைகள்

எழுங்கள் என்றனள் சுவடியை
ஒழுங்குற அடுக்கி, உடை அணிவித்துப்
புன்னை இலைபோல் புதையடிச் செருப்புகள்
சின்னவர் காலிற் செருகிச் சிறுகுடை
கையில் தந்து, கையொடு கூட்டித்
தையல் தெருவரை தானும் நடந்து,
பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும்
பிள்ளைகள் பின்னழகு வெள்ளம் பருகிக்
கிளைமா றும்பசுங் கிளிபோல் ஓடி
அளவ ளாவினாள் ஆள னிடத்தில்.

## கடைக்குப் போகும் கணவன்

கடைக்குச் செல்லக் கணவன், அழகிய
உடைகள் எடுத்தே உடுக்கலானான்.
"கழுத்துவரை உள்ள கரிய தலைமயிர்
மழுக்குவீர் அத்தான்" என்று மங்கை சொன்னாள்.
நறுநெய் தடவி நன்றாய்ச் சீவி
முறுக்கு மீசையை நிறுத்திச் சராயினை
இட்டிடை இறுக்கி எழிலுறத் தொங்கும்
சட்டை மாட்டத் தன்கையில் எடுத்தான்.
பொத்தலும் கிழிசலும் பூவை கண்டாள்;
தைத்தாள் தையற் சடுகுடு பொறியால்
ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப்
பாண்டிய மன்னன் மீண்டது போல,
உடுத்திய உடையும் எடுத்த மார்பும்
படைத்த கணவனைப் பார்த்துக் கிடந்தாள்.

## வெற்றிலைச் சுருள்

ஒற்றி வைத்த ஒளிவிழி மீட்டபின்,
வெற்றி லைச்சுருள் பற்றி ஏந்தினாள்;
கணவன் கைம்முன் காட்டி, அவன்மலர்
வாயில் தரத்தன் மனத்தில் நினைத்தாள்.
தூயவன் அப்போது சொன்ன தென்னெனில்,
"சுருளுக்கு விலைஎன்ன? சொல்லுவாய்?" என்ன
"பொருளுக்குத் தக்கது போதும்" என்றாள்
"கையிற் கொடுப்பதைக் காட்டிலும் சுருளை

Scanned by TapScanner

Scanned by CamScanner

வாயிற் கொடுத்திடு மங்கையே" என்றான்.
சேயிழை அன்பாய்ச் செங்கை நீட்டினாள்,
குடித்தனப் பயனைக் கூட்டி எடுத்து
வடித்த சுவையினை வஞ்சிக் களித்தல்போல்
தளிர்க்கைக்கு முத்தம் தந்து
குளிர்வாய் வெற்றிலை குழைய ஏகினனே!

# அறுசீர் விருத்தம்

## அவளின் காதலுள்ளம்

உணவுஉண்ணச் சென்றாள், அப்பம்
உண்டனள் சீனி யோடு
தணல்நிற மாம் பழத்தில்
தமிழ்நிகர் சுவையைக் கண்டாள்!
மணவாளன் அருமை பற்றி
மனம்ஒரு கேள்வி கேட்க,
'இணையற்ற அவன் அன்புக்கு
நிகராமோ இவைகள்' என்றாள்.

## பிள்ளைகள் நினைவு

பள்ளிக்குச் சென்றி ருக்கும்
பசங்களில் சிறிய பையன்
துள்ளிக் குதித்து மான்போல்
தொடர்ந்தோடி வீழ்ந்தா னோஎன்(று)
உள்ளத்தில் நினைத்தாள்; ஆனால்
மூத்தவன் உண்டென் றெண்ணித்
தள்ளினாள் அச்சந் தன்னை!
தாழ்வாரம் சென்றாள் நங்கை

## வீட்டு வேலைகள்

ஒட்டடைக் கோலும் கையும்
உள்ளமும் விழியும் சேர்த்தாள்;
கட்டிய சிலந்திக் கூடு,
கரையானின் கோட்டை யெல்லாம்
தட்டியே பெருக்கித் "தூய்மை"
தனியர சாளச் செய்து,
சட்டைகள் தைப்பதற்குத்
தையலைத் தொட்டாள் தையல்.

Scanned by TapScanner

Scanned by CamScanner

## தையல் வேலை

ஆடிக்கொண் டிருந்த தையற்
பொறியினை அசைக்கும் ஒர்கை;
ஓடிக்கொண் டிருக்கும் தைத்த
உடையினை வாங்கும் ஒர்கை!
பாடிக்கொண் டேயி ருக்கும்
பாவையின் தாம ரைவாய்;
நாடிக்கொண் டேயி ருக்கும்
குடித்தன நலத்தை நெஞ்சம்!

## மரச்சாமான்கள் பழுது பார்த்தல்

முடிந்தது தையல் வேலை
முன்உள்ள மரச்சா மான்கள்
ஒடிந்தவை, பழுது பார்த்தாள்;
உளியினால் சீவிப் பூசிப்
படிந்துள்ள அழுக்கு நீக்கிப்
பளபளப் பாக்கி வைத்தாள்;

## கொல்லூற்று வேலை

இடிந்துள்ள சுவர் எடுத்தாள்;
சுண்ணாம்பால் போரை பார்த்தாள்.

## மாமன் மாமிக்கு வரவேற்பு

நாத்தியார் வீடு சென்ற
நன்மாமன், மாமி வந்தார்.
பார்த்தனள்; உளம்ம கிழ்ந்தாள்
பறந்துபோய்த் தெருவில் நின்று
வாழ்த்திநல் வரவு கூறி
வணக்கத்தைக் கூறி, "என்றன்
நாத்தியார், தங்கள் பேரர்
நலந்தானா மாமி" என்றாள்.

வண்டிவிட் டிறங்கி வந்த
மாமியும் மாம னும், கற்
கண்டொத்த மரும கட்குக்
கனியொத்த பதிலுங் கூறிக்

Scanned by TapScanner

Scanned by CamScanner

கொண்டுவந் திட்ட பண்டம்
குறையாமல் இறக்கச் சொன்னார்
வண்டியில் இருந்த வற்றை
இறக்கிடு கின்றாள் மங்கை.

## மாமி மாமன் வாங்கி வந்தவை

கொஞ்சநாள் முன்வாங் கிட்ட
கும்ப கோணத்துக் கூசா,
மஞ்சள், குங்குமம் கண்ணாடி,
மைவைத்த தகரப் பெட்டி,
செஞ்சாந்தின் சீசா, சொம்பு
வெற்றிலைச் சீவற் பெட்டி,
இஞ்சியின் மூட்டை ஒன்றே,
எலுமிச்சைச் சிறிய கோணி.

புதியஓர் தவலை நாலு,
பொம்மைகள், இரும்புப் பெட்டி,
மிதியடிக் கட்டை, பிள்ளை
விளையாட மரச்சா மான்கள்,
எதற்கும்ஒன் றுக்கி ரண்டாய்
இருக்கட்டும் வீட்டில் என்று
குதிரினில் இருக்கும் நெல்லைக்
குத்திட மரக்குந் தாணி;

தலையணை, மெத்தைக் கட்டு,
சல்லடை, புதுமு றங்கள்,
எலிப்பொறி, தாழம் பாய்கள்,
இப்பக்கம் அகப்ப டாத
இலுப்பெண்ணெய்? கொடுவாய்க் கத்தி,
இட்டலித் தட்டு, குண்டான்,
கலப்பட மிலாநல் லெண்ணெய்,
கைத்தடி, செந்தா மும்பூ;

திருமணம் வந்தால் வேண்டும்
செம்மரத் தினில்முக் காலி,
ஒருகாசுக் கொன்று வீதம்
கிடைத்த பச்சரிசி மாங்காய்,
வரும்மாதம் பொங்கல் மாதம்
ஆதலால் விளக்கு மாறு,

Scanned by TapScanner
Scanned by CamScanner

பரிசாய்ச் சம்பந்தி தந்த
பாதாளச் சுரடு, தேங்காய்;

மூலைக்கு வட்டம் போட்டு
முடித்தமே லுறையும், மற்றும்
மேலுக்கோர் சுருக்குப் பையும்
விளங்கிடும் குடை, கறுப்புத்
தோலுக்குள் காயி தத்தில்
தூங்கும்மூக் குக்கண் ணாடி,
சேலொத்த விழியாள் யாவும்
கண்டனள் செப்ப லுற்றாள்;

### மருமகள் வினா

இவையெல்லாம் வண்டிக் குள்ளே
இருந்தன என்றால் அந்த
அவைக்களம் தனிலே நீவிர்
எங்குத்தான் அமர்ந்தி ருந்தீர்?
சுவைப்புளி அடைத்து வைத்த
தோண்டியின் உட்பு றத்தில்
கவ்ர்ந்துண்ணும் பூச்சி கட்கும்
கால்வைக்க இடமி ராதே?"

### மாமி விடை

என்றனள்; மாமி சொல்வாள்;
"இவைகளின் உச்சி மீதில்
குன்றுமேல் குரங்கு போல
என்றனைக் குந்த வைத்தார்!
என்தலை நிமிர, வண்டி
மூடிமேல் பொத்த லிட்டார்;
உன்மாமன் நடந்து வந்தார்
ஊரெல்லாம் சிரித்த" தென்றாள்!

### மாமன் பேச்சு

ஊரெல்லாம் சிரிக்க வைத்தேன்
என்றாளே உன்றன் மாமி!
யாரெல்லாம் சிரித்து விட்டார்?
எனஉன்றன் மாமி யைக்கேள்;

பாரம்மா பழுத்த நல்ல
பச்சைவா ழைப்ப ழங்கள்!
நேரிலே இதனை யும்பார்
பசுமாட்டு நெய்யின் மொந்தை;

"வண்டியில் எவ்வி டத்தில்
வைப்பது? மேன்மை யான
பண்டத்தைக் காப்ப தற்குப்
பக்குவம் தெரிந்தி ருந்தால்
முண்டம்இப் படிச்சொல் வாளா?
என்னதான் முழுகிப் போகும்
அண்டையில் நடந்து வந்தால்?"
என்றனன், அருமை மாமன்.

## மருமகள் செயல்

மாமனார் கொண்டு வந்த
பொருளெல்லாம் வரிசை செய்து,
தீமையில் லாத வெந்நீர்
அண்டாவில் தேக்கி வைத்துத்
தூய்மைசேர் உணவு தந்து,
துப்பட்டி விரித்த மெத்தை
ஆம், அதில் அமரச் சொல்லிக்
கறிவாங்க அவள் நடந்தாள்;

கடையிலே செலவு செய்த
கணக்கினை எழுதி வைத்தாள்;
இடையிலே மாமன், "விக்குள்
எடுத்தது தண்ணீர் கொஞ்சம்
கொடு" எனக் கொடுத்தாள். பின்னர்க்
கூடத்துப் பதுமை ஓடி
அடுக்களை அரங்கில், நெஞ்சம்
அசைந்திட ஆட லானாள்.

## என்ன கறி வாங்கலாம்?

கொண்டவர்க் கெதுபி டிக்கும்
குழந்தைகள் எதைவி ரும்பும்
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்கதென்ன

Scanned by TapScanner

Scanned by CamScanner

உண்பதில் எவரு டம்புக்(கு)
எதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள், கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்.

## பிள்ளைகள் உள்ளம் எப்படி?

பொரியலோ பூனைக் கண்போல்
பொலிந்திடும்; சுவைம ணக்கும்!
"அருந்துமா சிறிய பிள்ளை"
எனஎண்ணும் அவளின் நெஞ்சம்;
இருந்தந்தச் சிறிய பிள்ளை
இச்சென்று சப்புக் கொட்டி
அருந்தியே மகிழ்ந்த தைப்போல்
அவள்காதில் ஓசை கேட்கும்!

## அத்தானுக்கு எது பிடிக்கும்?

பொருளையும் பெரிதென் றெண்ணாள்,
பூண்வேண்டாள்; தனைம ணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
அன்பினாள்; வறுத்தி றக்கும்
உருளைநற் கிழங்கில் தன்னை
உடையானக் கிருக்கும் ஆசைத்
திருவுளம் எண்ணி எண்ணிச்
செவ்விள நகைசெய் கின்றாள்.

## எதிர்கால நினைவுகள்

இனிவாழும் நாள்நி னைத்தாள்
இளையவர் மாமன் மாமி;
நனிஇரங் கிடுதல் வேண்டும்
நானவர்க் கன்னை போல்வேன்;
எனதத்தான் தனையும் பெற்று
வாழ்ந்தநாள் எண்ணும் போதில்
தனிக்கடன் உடையேன், நானோர்
தவழ்பிள்ளை அவர்கட் கென்றாள்.

கிழங்கினை அளியச் செய்வாள்,
கீரையைக் கடைந்து வைப்பாள்

Scanned by TapScanner

Scanned by CamScanner

கொழுங்காய்ப்பச் சடியே வைப்பாள்
　　கொல்லையின் முருங்கைக் காயை
ஒழுங்காகத் தோலைச் சீவிப்
　　பல்லில்லார் உதட்டால் மென்று
விழுங்கிடும் வகை முடித்து
　　வேண்டிய எல்லாம் முடித்தே.

## முதியவருக்குத் துணை

தூங்கிய மாமன் "அம்மா
　　தூக்கென்னை" என்று சொல்ல,
ஏங்கியே ஓடி மாமன்
　　இருக்கின்ற நிலைமை கண்டு,
வீங்கிய காலைப் பார்த்தாள்
　　"எழுந்திட வேண்டாம்" என்றாள்;
தாங்கியே மருந்து பூசிச்
　　சரிக்கட்டிப் படுக்க வைத்தாள்;

## அவளோர் மருத்துவச்சி

நாடியில் காய்ச்சல் என்றே
　　நன்மருந் துள்ளுக் கீந்தாள்;
ஓடிநற் பாலை மொண்டு,
　　மறுவுலைக் கஞ்சி ஊற்றி
வாடிய கிழவர்க் கீந்தாள்;
　　மாமிக்கோ தலைநோக் காடாம்.
ஓடிடச் செய்தாள் மங்கை
　　ஒரேபற்றில் நொடிநே ரத்தில்.

## அள்ளி அணைத்தாள் பிள்ளைகளை

குழந்தைகள் பள்ளி விட்டு
　　வந்தார்கள்; குருவிக் கூட்டம்
இழந்தநல் லுரிமை தன்னை
　　எய்தியே மகிழவ தைப்போல்;
வழிந்தோடும் புதுவெள் ளத்தை
　　வரவேற்கும் உழவ ரைப்போல்,
எழுந்தோடி மக்கள் தம்மை
　　ஏந்தினாள் இருகை யாலும்!

Scanned by TapScanner

Scanned by CamScanner

காடெலாம் ஆடும் கூத்தே;
        காகங்கள் குருவி எல்லாம்
மாடெல்லாம் இவ்வா றானால்
        மனிதர்க்கா கேட்க வேண்டும்?

## கடையை மறந்தீரோ?

இசையினில் தனை மறந்தே
        இருந்ததன் கணவன் தன்னைக்
"கடையினை மறந்து விட்டீர்
        கணக்கர் காத்திருப்பார்" என்று
நடையினில் அன்னம் சொன்னாள்;
        நல்லதோர் நினைவு பெற்ற
உடையவன் "ஆம் ஆம்"
        ஆயினும் "உம் உம்" என்றான்.

## மனைவியிடம் பிச்சை கேட்டான்

"கண்ணல்ல; நீதான் சற்றே
        கடைக்குப்போய்க் கணக்கர் தம்மை
உண்பதற் கனுப்பி, உண்டு
        வந்தபின் வா; என் னாசைப்
பெண்ணல்ல" என்று சொல்லிச்
        சோம்பலால் பிச்சை கேட்டான்
கண்ணல்ல, கருத்தும் போன்றாள்
        "சரி" என்று கடைக்குச் சென்றாள்.

## கடையின் நடைமுறை

மல்லியை அளப்பார்; கொம்பு
        மஞ்சளை நிறுப்பார்; நெய்க்குச்
சொல்லிய விலை குறைக்கச்
        சொல் லுவார்; கொள் சரக்கின்
நல்லியல் தொகை கொடுப்பார்;
        சாதிக்காய் நறுக்கச் சொல்வார்
வெல்லம்என் றொருகு ழந்தை
        விரல்நீட்டும் கடைக்கும் வந்தாள்.

Scanned by TapScanner

Scanned by CamScanner